1972 ஆகஸ்ட் 19]

லாம் என்று பல இடங்களில் செய்து காட்டப்படுகிறது. அது உடலுக்கும் நல்லது, குழந்தைகளுக்கும் நன்கு பயன்படும்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, பம்பாயிலிருந்து வருகிற ' சபோலா ' இதே எண்ணெய் தானா? தெரியாததால் இங்கு வடநாட்டிலிருந்து எண்ணெய் வரவழைக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, அதே எண்ணெய் தான்.

Cultivation of Saffron

* 109. *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether steps have been taken by the Agriculture Department to cultivate saffron in this State; and

(*b*) if so, the details thereof?

குங்குமப்பூ பயிரிடுதல்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் குங்குமப்பூ பயிரிட வேளாண்மைத் துறை முயற்சி எடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) உதகமண்டலத்திலும் கோடைக்கானலிலுள்ள பிரையன்ட் பூங்காவிலும் அமைந்துள்ள அரசு விதைப்பண்ணைகளில் குங்குமப்பூ பயிரிடுவதற்கான சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நடத்தப்பட்டுள்ள சோதனைகளின் முடிவுகள் தெரியவந்த பின்னரே, குங்குமப்பூ பயிரிடுவதைப்பற்றிக் கருதிப்பார்க்கப்படும்.

Gurjun Plantations

* 110. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are gurjun plantations in this State; and

(*b*) if so, the details thereof?